# கடைசி நாட்களில் எச்சரிக்கையாய் இருக்கும்படிக்கு ஒரு வேண்டுகோள் [2 தீமோத்தேயு 3]

*"மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக ... நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறது மல்லாமல்," (2 தீமோ. 3:1, 14).*

விசுவாசத்தில் தமது குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தை, சோதனை வேளைகளிலும்கூட தீமோத்தேயு உறுதியாய் நிலைநிற்குமாறு வேண்டுகோளுடன் பவுல் தொடங்கினார் (அதிகாரம் 1). ''பழைய போர் வீரர்,'' தீமோத்தேயு பெற்றிருந்த உபதேசத்தை உண்மையுள்ள போதகர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளும்படி யாகவும், பவுலினால் உதாரணத்துவப்படுத்தப்பட்ட நியமத்தை பின்பற்றும்படியும் வற்புறுத்தினார் (அதிகாரம் 2). அடுத்ததாகப் பவுல், தீமோத்தேயுவை, கொடிய மனிதர்களுக்கெதிராக எச்சரிக்கையாய் இருக்கும்படியாகவும் (3:1-9) மற்றும் பவுலின் உதாரணம், தனது சுய நற்பயிற்சி மற்றும் வேத வசனங்கள் ஆகியவற்றினால் தன்னையே காத்துக் கொள்ளும்படியாகவும் எச்சரித்தார் (3:10-17).

## பாடம் 8: சீர் கேட்டிற்கு எதிராக உன்னைக் காத்துக் கொள் (3:1-9)

பவுல், 3:1-9ல் "கடைசி நாட்களுடன்" தொடர்புடைய எச்சரிக்கை ஒன்றைக் கொடுத்தார். சிலர் இந்தக் "கடைசி நாட்கள்" என்பதை ஒரு

இரகசியமான சொற்றொடர் என்பதாகச் சிந்தித்துள்ளனர், இது அடிக்கடி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொற்றொடரானது தேவன் "தமது குமாரன் மூலமாக" (எபி. 1:1, 2) பேசத் தொடங்கிய நாளில் இருந்து - சபை தொடங்கிய பெந்தெகொஸ்தே நாளில் இருந்து (அப். 2:1, 16, 17) விசுவாச விலக்கத்தின் பிற்கால நாட்கள் வரை (1 தீமோ. 4:1-3), பரியாசக்காரர் எழும்பும் நாட்களை (2 பேது. 3:3-7) மற்றும் நியாயத்தீர்ப்பு நடைபெறும் நாள் வரை (யோவா. 12:48) எந்தக் காலத்தையும் குறிக்கக் கூடும்.

"மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக" என்று தீமோத்தேயுவுக்குக் கூறப்பட்டது. இந்த "கொடிய காலங்கள்"[1] என்பது இப்பொழுதே இருக்கக் கூடும் என்பதே நமக்குப் பாடமாக உள்ளது. தீமோத்தேயுவைப் போல நாமும் இதை "அறிவது"[2] அவசியமாக உள்ளது. முன்னதாக எச்சரிக்கப்படுதல் என்பது முன்னதாகவே ஆயுதம் தரித்திருப்பதாக உள்ளது. தொடர்ந்து வரும் வசனங்களில் பவுலினால் விவரிக்கப்பட்ட நிலைப்பாடுகள் நம்மைப் பிடித்தன வென்றால், நமது காலம் மூர்க்கமானதாகவும் கொடூரமானதாகவும் இருக்கும். இவ்விதமாகப் பவுல் ஒரு தெளிவான எச்சரிக்கையை தீமோத்தேயுவுக்கும் நமக்கும் கொடுத்துக் கொண்டிருந்தார்!

## விவரிப்பு (வ. 1-5)

பவுல், கடைசி நாட்களின் சீர்கேடான மனிதர்களைப் பற்றி விவரமாக விளக்கப்படுத்திய பிறகு (3:2-5) "இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு" (3:5) என்று கூறினார். "விலகு" (கிரேக்கம்: apotrepo) என்பது "புறம்பே திரும்பு ... (அவற்றிலிருந்து) ஒருவர் தம்மைத் திருப்புவது, விலக்கி மூடுவது"[3] என்று அர்த்தப்படுகின்றது. "மற்றும் இவை தொடர்ந்து விலக்கப்பட்டிருக்க வேண்டும்"[4] என்று இதை கென்னைத் வூஸ்ட் மொழிபெயர்த்தார். இது (2 தெச. 3:6, 14, 15; 1 கொரி. 5:1-5 ஆகியவற்றில் உள்ளது போல) "சபை ஒழுங்குமுறை" தொடர்பானதாகக் காணப்படுவதில்லை. இந்த சந்தர்ப்பப் பொருளானது 2 கொரி. 6:14-7:1ன் சந்தர்ப்பப் பொருளை அதிக அளவில் ஒத்துள்ளது, அங்கு பவுல், சகோதரர்கள் அவிசுவாசிகளுடன் உலகப் பிரகாரமான வழிகளில் (1 யோவா. 2:15-17ஐக் கவனிக்கவும்) ஆழ்ந்து விடாதபடி அவர்களுடன் பிணைக்கப்படாதிருக்கும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். 2 தீமோ. 3:2-9ல் பவுல், விசுவாசமற்ற சகோதரர் களைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதாமல், பொதுவில் (கிரேக்கம்: anthropoi) மக்களைப் பற்றி எழுதினார். இவ்விடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வாழ்வு முறைகளை சகோதரர்கள் பின்பற்றத் தொடங்கினால், அது சபை ஒழுங்கு முறையை மேற்கொள்ளுமளவுக்கு பிரச்சனைகளுக்கு வழிநடத்தும் என்பது உண்மையே (1 கொரி. 5:9-13; தீத்து 3:9-11).

பவுல் 1 கொரி. 15:33ல் சகோதரர்களை எச்சரித்தார்: "மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்." இதனை பவுல் இங்கு தரும் வரைபட அளவிலான எச்சரிக்கை

யுடன் இணையுங்கள்; இப்படிப்பட்ட பாணிகளையோ அல்லது மக்களையோ நாம் ஒருக்காலும் பின்பற்றக் கூடாது, என்பதை நமது சிந்தையில் நாம் என்றென்றைக்கும் தீர்மானம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

## *செய்கைகள் (வ. 6-9)*

*வசனங்கள் 6 முதல் 9 வரையிலும் சித்தரிக்கப்பட்ட மக்கள் நடக்கையில் ஒழுக்கமற்றவர்களாய் உள்ளனர் (3:6).* இவர்கள் "வீடுகளில் நுழைகின்றனர்''[5] என்று பவுல் எழுதினார். மேலும் இவர்கள், "வசப்படுத்திக்"[6] கொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள். "பாவங்களினால் நிறைந்துள்ள''[7] ''பலவீனமான பெண்களை''[8] சிறைப்பிடித்தவர்களாய் இருந்தனர். இது பவுலின் நாட்களில் இருந்த தனிநபர்களால் ஒருமுறை மட்டும் செயல்பட்டதாய் இராமல், "பற்பல இச்சைகளினால்"[9] ஆன வாழ்வு முறையாய் இருந்தது என்பது தெளிவு. அந்த சொற்றொடருக்கான விளக்கத்தின் வெளிச்சத்தில், ''பற்பல இச்சைகளினால்'' என்று பவுல் குறிப்பிட்டது ஏன் என்பது பற்றி வியப்பெதுவும் இருப்பதில்லை. நாம் இச்சைகளின் கடலில் நீந்துகிறோம்! வெளி. 2:20-23ல், யேசபேல் என்ற பெண், இச்சைகளினால் மனிதர்களைச் சிறைப்பிடித்துக் கொண்டிருந்தாள். ரோமர் 1:26, 27ல் ஆண்கள் ஆண்கள்மீது இச்சை கொண்டிருந்தனர், நமது நாட்களில் (சில) பெண்கள் பெண்கள்மீது இச்சை கொண்டுள்ளனர். சீர்கேடான மக்கள் பாவத்தின் அசுத்தக் குட்டையில் தாங்கள் இறங்கிவிடும் வகையில் மாம்சப் பிரகாரமான ஒவ்வொரு சோதனையையும் பின்பற்றுகின்றனர்!

இம்மக்கள், நடக்கையில் ஒழுங்கீனமானவர்களாய் இருப்பதுடன், *படிப்பிலும் சோம்பற்தனமாய் உள்ளனர்* ("எப்போதும் கற்றாலும், ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்கள்;" 3:7). இங்கு சோம்பற்தனம் என்பது, "வளருவதற்கு அறிவது" என்பதற்கு மாறாக, "அறிவதற்கு அறிவது" என்ற எண்ணப்போக்கை அடையாளப்படுத்தும் இச்சையுடன் இணைத்து சொல்லலாம். இது பேராசையின் காரணங்களினால் தூண்டப்பட்டிருக்கை யில் சுயநல காரணங்களுக்காகப் படித்தல் என்பதால் யோவா. 7:17, 18ன் ஆவியை மீறுகின்றது.

*இவர்கள் சத்தியத்தின் முன்னிலையில் திருத்த முடியாதவர்களாய் இருந்தனர்.* இந்த நடக்கையானது யந்நே மற்றும் யம்பிரே ஆகியோரின் இயல்பினால் விவரிக்கப்பட்டது, இவர்கள் மோசேயை எதிர்த்து நின்றவர்கள் ஆவர்: "... இவர்களும் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள்; இவர்கள் துர்ப்புத்தியுள்ள மனுஷர்கள், விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள். ஆனாலும், ... அவ்விருவருடைய மதிகேடு எல்லாருக்கும் வெளிப்பட்டது போல, இவர்களுடைய மதிகேடும் வெளிப்படும்" (3:8, 9).

பவுலினால் விவரிக்கப்பட்ட மனிதர்கள் இரு வகையான விலகிச் செல்லுதலினால் குற்றம் உடையவர்களாய் இருந்தனர். முதலாவது, அவர்கள் "துர்ப்புத்தியுள்ள"[10]வர்களாய் இருந்தனர். ஒருவருடைய புத்தி

*(சிந்தை) வீணாக்கப்படும் பொழுது, அது எவ்வளவு பெரிய வீணாக உள்ளது! இரண்டாவது, அவர்கள் "விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்."[11] விசுவாசத்தில் கட்டியெழுப்பப்படுவதற்காக இந்த மனிதர்களுடன் வரிசையில் நிற்கிற எவரொருவரும் தங்கள் முயற்சிகளைத் தகுதியற்றவைகளாகவும் வீணானவைகளாகவும் காண்பார்கள்!*

*இவ்வழிகளில் நடந்து கொள்கிற மக்கள் பொதுவாகவே விரும்பப்படக் கூடாதவர்களாய் இருப்பார்கள், "ஏனெனில் அவர்களின் அறிவீனம் எல்லாருக்கும் தெளிவாய்க் காணப்படும்" (எண். 32:23; 1 கொரி. 5:1; 1 தீமோ. 5:24ஐக் காணவும்).*

## தொகுப்புரையில்

*வசனங்கள் 1 முதல் 5 வரையுள்ள பட்டியலானது ஒருவரின் பண்பைக் கட்டுப்படுத்துகிற உள்ளான நிலைப்பாடுகளை அறிவிக்கிறது. இருப்பினும், இந்த உள்ளான பண்பினங்கள் செயல் அடங்கியுள்ள நிலையிலேயே நிலைத்திருக்காது. இவை தங்கள் இயல்புக்குப் பொருத்தமான செய்கைகளைத் தூண்டி விடும். இன்றைய நாட்களில் மக்களில் நாம் காணக்கூடிய மூன்று வகையான செயல்பாடுகள் இந்த நிலைப்பாடுகளில் இருந்து எப்படி வெடிக்கின்றன என்று பவுல் அடையாளப்படுத்தினார்: அவர்கள் நடத்தையில் ஒழுக்கவீனமானவர்களாய் உள்ளனர் (3:6), படிப்பில் சோம்பேறித்தனமாக உள்ளனர் (3:7), மற்றும் சத்தியத்தின் முன்னிலையில் திருத்தப்பட முடியாதவர்களாய் உள்ளனர் (3:8, 9).*

## பாடம் 9: உங்களைக் காத்துக் கொள்வதற்கான வல்லமை (3:10-17)

கொள்கைகளிலும் நபர்களிலும் கவனிப்பதற்கு மோசடியின் வகைகளைப் பவுல் அப்பொழுதுதான் வரைபட அளவையில் பட்டியலிட்டிருந்தார். மோசேயை விட எவ்வகையிலும் அதிகமாய் தீமோத்தேயு எதிர்ப்பிலிருந்து தப்பிக்க முடியாதிருந்தது என்பது தெளிவு. நாம் கூட அவ்வாறு செய்ய இயலாது. தீமோத்தேயு அநேகமாகச் செய்திருக்கக் கூடிய வகையில் நாம், "கிறிஸ்துவின் போதனைக்கு எதிராக வாழ்கின்றவர்களை நாம் எவ்வாறு 'தவிர்க்க' முடியும்?" என்று கேட்பதற்கு துணிகரமாய் முயற்சி செய்யலாம்.

## பவுலினுடைய உதாரணத்தின் வல்லமை (வ. 10-13)

தீமோத்தேயுவும் பவுலும் ஒரே விதமான முன்மாதிரியை "பின்பற்றி" யிருந்தார்கள். பவுல், "நீயோ என் போதகத்தையும் நடக்கையையும்,

*நோக்கத்தையும் விசுவாசத்தையும், நீடிய சாந்தத்தையும் அன்பையும், பொறுமையையும் ... துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்" (3:10, 11)*[12] என்று கூறினார். தீமோத்தேயு பின்பற்றத் தேவையாய் இருந்தவற்றைப் பவுல் "என் போதகம்" என்று தொகுத்துக் கூறியிருந்தார். பவுல் போதித்தவை பரீட்சைக்கு உறுதியாய் நிற்கும் (1 தீமோ. 4:16; 2:7; ரோமர் 9:1; 2 கொரி. 2:17ஐக் காணவும்).

அந்த போதனைகள் நமது வாழ்வுக்கு எவ்வாறு நடைமுறைப் படுகின்றன என்பது பவுலின் "நடக்கையில்"[13] தெளிவாகின்றது. ஒருவர் போதிப்பவற்றிலிருந்து மட்டுமின்றி, ஒருவர் செய்வதிலிருந்தும் பிறர் கற்றுக் கொள்ளும் பொழுதும், அது எவ்வளவு மேன்மையானதாக உள்ளது! (அப். 1:1; 1 கொரி. 11:1).

பவுலின் வாழ்வு "நோக்கம்"[14] கொண்டிருந்த காரணத்தால் அவர் போதித்தவாறே அவர் வாழ்ந்திருந்தார். பவுல், தேவன் தமக்கு ஒப்புவிக்கும் தேவ சித்தத்தைச் செய்வதே தமது இலக்கு என்பதை மீண்டும் மீண்டும் செயல்விளக்கப்படுத்தியிருந்தார் (2 கொரி. 5:7-11; கலா. 1:10-12). வாழ்வில் அவரது நோக்கமானது பின்வரும் பண்புகளின் மூலம் சாதிக்கப்படக் கூடியதாய் இருந்தது:

"விசுவாசம்." (1:12; 1 தீமோ. 1:12, 18, 19; 2 கொரி. 5:7ஐக் காணவும்). இந்த விசுவாசம் ஒருவரை, காணக் கூடாததைக் காணக் கூடியவராக்குகிறது, தவிர்க்க முடியாததை வெற்றி கொள்ளுகிறது, மற்றும் மனிதரால் கூடாதவற்றை நம்பத் தைரியம் கொண்டுள்ளது (எபி. 11:1-3; 1 யோவா. 5:4).

"பொறுமை."[15] பவுல் தம் சகோதரர்களை விட்டுக் கொடுத்து விடமாட்டார் அல்லது கிறிஸ்துவினிமித்தம் தாமே நிறைவேற்றிய தேவ ஊழியத்திலிருந்து உபத்திரவங்கள் தம்மைத் திருப்புவதற்கு அனுமதிக்க மாட்டார் என்ற காரணத்தினால் பலர் பரலோகத்தில் இருப்பார்கள் (பிலி. 3:7-17).

"அன்பு."[16] நம்புதற்கரிய இந்த வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் காணப்படும் இடங்களில் மாறுபட்ட சந்தர்ப்பப் பொருட்களில் பல பயன்பாடுகளை அளிக்கின்றது. பவுல் பேசிய அன்பு என்பது சகலத்தையும் சகிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் தாங்கும், மற்றும் ஒருக்காலும் ஒழியாது (1 கொரி. 13:4-7). தீமோத்தேயு வுக்கும் நமக்கும் என்ன ஒரு பலம் உள்ளது!

"நீடிய சாந்தம்."[17] இந்தப் பண்பானது விசுவாசம், பொறுமை மற்றும் அன்பு ஆகியவற்றின் இயல்பான வெளிவளர்ச்சியாக உள்ளது! பவுல் பல "துன்புறுத்துதல்களையும்" "பாடுகளையும்"[18] கிறிஸ்துவுக்காக சகித்திருந்தார். அவரது தழும்புகள் மற்றும் துன்பங்கள்/போராட்டங்கள் ஆகியவைப் பற்றிய ஒரு ஆய்வானது நம்மை அவரது மிகச் சிறந்த ஆவியைப் பற்றி வியப்படையச் செய்கிறது:

> அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன்,

> அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன்; ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்று தரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலில் ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுய ஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது (2 கொரி. 11:23-28).

"அணி வகுத்து" செல்வதற்கு தீமோத்தேயுவுக்கும் நமக்கும் என்ன ஒரு ஊக்கப்படுத்துதலாக இது உள்ளது!

பவுல் சந்தித்திருந்த பாடுகள் பற்றிய திட்டவட்டமான புவியியல் இடங்கள் பற்றித் தீமோத்தேயு அறிந்திருந்தார்: ''அந்தியோகியா, இக்கோனியா மற்றும் லீஸ்திரா என்னும் பட்டணங்களில்" (3:11; அப். 14:19-21; 16:1-3). அந்தப் பாடுகளில் பவுலின் முன்மாதிரியை அவர் (தீமோத்தேயு) கண்டு கொள்ளாதிருக்க முடியாதிருந்தது: பவுல் பாடு அநுபவித்தது மட்டுமின்றி அவற்றை "சகித்தும்"[19] இருந்தார். அழுத்தங்கள் என்னும் மலையின் கீழ் உயரமாய் நின்ற பவுல், நாம் சகிக்க வேண்டியதாக உள்ள பொல்லாங்கின் பாரத்தின் கீழ் நாம் விழுந்து விடாதபடிக்கு தீமோத்தேயுவுக்கும் நம்மில் பலருக்கும் உதவுகின்றார் (யாக். 1:2-4; 1 பேது. 1:6-9).

பவுல் தாம் செய்ததைக் குறித்து சகித்திருக்க முடிந்தது எவ்வாறு என்பதை யூகம் செய்து கொள்ளும்படி விட்டு விடப்பட நாம் அனுமதிக்கப் படுவதில்லை. பவுல் தமது "சகிப்புத் தன்மையுள்ள ஆவி" செயல்பட்ட வழி வகையை வெளிப்படுத்தினார்: அவர், ''இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கி[20] விட்டார்" (3:11) என்று கூறினார்.

அதிகமான போராட்டங்களின் வாக்குத்தத்தம் (3:12) இந்த விஷயத்தைச் செய்து முடிப்பதன் நடைமுறைத் தன்மையை நிரூபிக்கின்றது. பவுலின் வார்த்தைகளில் இந்த வாக்குத்தத்தம் பற்றிய உறுதிப்பாடும் விரிவாக்கமும் அடங்கியுள்ளன. "எல்லாரும்" துன்புறுத்தலை அனுபவிக்க வேண்டியதாயிருக்கும் (மத். 5:10, 11; 24:9-14; அப். 7:52). "எல்லாரும்" என்பது, "தேவபக்தியின் வேஷத்தை தரித்துக் கொண்டு" அதன் பெலனை மறுதலிப்பவர்களுக்கு நேர்மாறாக குறிப்பிட்ட வகையில் "தேவபக்தியுடன் வாழ்பவர்களை"ப் பற்றிக் குறிப்பிடுகின்றது (3:5).

''தேவபக்தியுள்ளவர்கள்'' துன்புறுவார்கள் என்று பவுல் கூறினார். மேலும், இவ்விடத்தில் உள்ள "வாழுதல்" என்ற வார்த்தையானது ஏதோ ஓரிடத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கான சொற்றொடர் அல்ல. இது *zao*[21]

என்ற கிரேக்கச் சொற்றொடராக உள்ளது, இது வலிவையும் சக்தியையும் உரியதாய் உள்ளது. ஆகவே, இந்த வாழ்வு முறையானது சமூகத்தைச் சாரமேற்றும் உப்பாக இருக்கவும், இருளை நீக்கும் ஒளியாக இருக்கவும் துணிவு கொள்கின்றது, இங்கு சத்தியமானது தவறை (சுட்டிக்காட்டி) வெளிப்படுத்துவதாகவும் நீதிக்காக நிலைப்பாட்டை மேற்கொள்வதாகவும் உள்ளது (மத். 5:13-16; எபே. 5:6-8). தவறான வாழ்வுமுறையானது அறிவீனத்திற்கும், மாம்சத்திற்கு அடிமைப்படுதலுக்கும் வழிநடத்துகின்றது.

சொல் வழக்கின் கருத்தானது இங்கு ஏற்றுக் கொள்ளத் தக்கதாக உள்ளது: " 'மகிழ்வுடன் இருங்கள்! இது இன்னும் மோசமாயிருக்கக்கூடும்!' என்று எனக்குக் கூறப்பட்டது, எனவே நான் மகிழ்ந்தேன், அப்பொழுது விஷயங்கள் இன்னும் மோசமாயிற்று!" இந்த வாழ்வில் "பொல்லாதவர்களான[22] மனிதர்களுக்கு" முடிவு என்பது ஒருக்காலும் வருவதில்லை (3:13).

பொல்லாதவர்களுடன் "எத்தர்கள்"[23] கூட்டப்படுகின்றனர். இவ்வகையினர் "மோசம் என்பதிலிருந்து மிக மோசம் என்பதற்கு முன்னேறுகின்றனர்."[24] உண்மையாகவே இந்தச் சொற்றொடரானது அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட நெடுஞ்சாலையில் முன்னேறிச் செல்வதைக் காண்பிக்கிறது, ஆனால் அது தவறான நெடுஞ்சாலையாக உள்ளது!

இந்த மக்கள் "மோசம் போக்குகிறவர்களாகவும்[25] மோசம் போகிறவர்களாகவும்" இருந்தனர். இங்கு ஒருவர் தாம் விதைப்பதையே அறுப்பார் என்ற மிகச் சிறந்த உதாரணம் உள்ளது (கலா. 6:7, 8). செய்வினைப் பெயரெச்சமானது அவர்கள் மோசம் போக்குதலைச் செய்து கொண்டிருந்ததையும், செயப்பாட்டு வினைப் பெயரெச்சமானது அவர்கள் மோசம் போக்கப்பட்டதையும் - அதனால் அவர்கள் தங்கள் சுயமருந்தின் ஒரு அளவைப் பெற்றதையும் - காண்பிக்கின்றது!

விளைவுகள் இருமடங்கு மோசமானவைகளாய் இருந்தன, ஏனென்றால் எல்லாரும் மோசம் போக்கப்பட்டார்கள். இவ்வகையான நடக்கை தொடர்ந்து நடைபெறும் என்பது எவ்வளவு பரிதாபமானது! ஆனால் பவுலின் தீர்க்கதரிசனம் எவ்வளவு உண்மையானதாக இருந்துள்ளது!

## நல்ல பயிற்சியின் வல்லமை (வ. 14, 15)

"(இருப்பினும்) நீ" (3:14) என்ற வார்த்தையானது தீமோத்தேயுவுக்கு ஒரு தெளிவான எதிர்மறையை அறிமுகப்படுத்திற்று. அவர் பொல்லாதவராகவோ, எத்தராகவோ இருக்கக் கூடாது. அவர் "மோசமான நிலையிலிருந்து மிக மோசமான நிலைக்கு" முன்னேறவோ, மோசம் போக்கவோ அல்லது மோசம் போக்கப்படவோ கூடாது. தீமோத்தேயு என்ன செய்ய வேண்டியவராய் இருந்தார்?

### கட்டளை

பொல்லாங்கான முன் மாதிரிகளுக்கு நேர்மாறாக, பவுல் தீமோத்தேயுவுக்கு, "நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு"[26] என்று

*கட்டளையிட்டார். இது தீமோத்தேயு முதலில் தனது தாய் மற்றும் பாட்டி ஆகியோரிடமிருந்தும் (1:5), பிறகு பவுலிடமிருந்தும் (1:6; 2:1, 2) கற்றிருந்த விஷயங்களைக் குறிக்கின்றது.*

*இந்தக் கட்டளைக்கான காரணத்தையும் பவுல் அளித்ததால், இந்தக் கட்டளை மதிப்புள்ளதாக இருந்தது: "நீ கற்று நிச்சயித்துக் கொண்டவை களில்"[27] (3:14). ஒருவர் இவ்விதமாகத் தேவனுடனும், தேவனுடைய வசனத்துடனும், தேவனுடைய வாக்குத்தத்தங்களுடனும் உறவு படுத்தப் பட்டிருப்பது எவ்வளவு மேன்மையானதாக உள்ளது! அவர் நிமித்தம் நாம் பாடுபடுகையிலும் கூட, நமது நிறைவான வெற்றியைப் பற்றி நாம் மிகுந்த நம்பிக்கையுடன் அறிய முடியும் (எபி. 11:1-12:1; ரோமர் 8:31-39).*

**உறுதியான நம்பிக்கை**

*தீமோத்தேயுவுக்கோ அல்லது நமக்கோ "அறிதல்"[28] என்ற அஸ்திபாரத் தின் மேல்தான் உறுதியான நம்பிக்கையானது நிலைநிற்கிறது. "அறிதல்" என்பதற்குப் பவுல் இவ்விடத்தில் பயன்படுத்தியதைக் காட்டிலும் அதிக பலம் வாய்ந்த வார்த்தை வேறெதுவும் இல்லை.*

*இவ்வகையான "உறுதியான நம்பிக்கையுடன் கூடிய அறிதல்" என்பது இரண்டு காரணங்களுக்காக மேம்படுத்தப்பட்டிருந்தது:*

*<u>தீமோத்தேயு தனிச்சிறந்த தகுதி வாய்ந்த போதகர்களிடமிருந்து கற்றுக்</u> கொண்டிருந்தார். தேவபக்தியுள்ள தாய் மற்றும் பாட்டி, அத்துடன் கூடுதலாக அப்போஸ்தலரான பவுல் ஆகியோரை விட மேன்மையான போதகர்களை யார் பெற்றிருக்க முடியும் (3:14; 1:5, 6; 2:2)?*

*<u>அவர் காலத்தின் பரீட்சைக்கு நிலைநின்றிருந்தார்</u>: "நீ சிறுவயது முதலே அறிந்தவன் ..." (3:15). இங்கு oida என்ற பலம் வாய்ந்த கிரேக்க வார்த்தை மீண்டும் வருகிறது. இந்த ஆழமான அறிதல் என்பது அறைகூவல் விடுவிக்கும் சோதனைகளினாலும் காலத்தின் பயன்பாடுகளினாலும் மேம்பட்டிருந்தது. ஒரு கால கட்டத்தில் செயல்பாட்டுக்குத் தக்கதாய் உள்ள ஒரு கொள்கையோ அல்லது கருத்தோ, இன்னொரு காலகட்டத்தில் போதுமானதாயிராமலோ அல்லது ஞானமற்றதாகவோ கூட நிரூபிக்கப் படலாம். (ஆனால்) தக்க வகையில் பயன்படுத்தப்படும் தேவனுடைய வசனமானது ஒருக்காலும் தவறுவதோ அல்லது தோல்வியடைவதோ இல்லை! இதன் நம்பகத் தன்மையானது தீமோத்தேயுவின் குழந்தைப் பருவத்திலிருந்தே அவரது மனதில் ஆழப்பதிந்திருந்தது!*

*ஆகவே, தீமோத்தேயு, <u>அறியப்பட்ட சத்தியங்களை அறிந்திருந்த போதகர்களால்</u> போதிக்கப்பட்டவராய் இருந்தார். இவ்விரண்டிலும் அவர் முற்றிலும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். குழந்தைப் பருவத்தி லிருந்தே சத்தியத்தை அறிதல் என்ற கற்றுக் கொள்ளுதலின் இப்படிப்பட்ட பரம்பரைச் சொத்தைக் கொண்டுள்ள மக்கள் எவ்வளவாய் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளனர்! ஆவிக்குரிய பயிற்சியானது அவ்வாறு இருக்க வேண்டும் என்றுதான் தேவன் நோக்கம் கொண்டுள்ளார். <u>நீங்கள் உங்களைச் சுற்றிலும்</u> உள்ள மக்களுக்கு அவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்தே இவ்வகைப் பட்ட மாபெரும் கற்றல் அனுபவத்தைக் கொடுப்பீர்களா?*

## விளைவுகள்

"பரிசுத்த[29] எழுத்துக்களை" அறிவதிலிருந்து நற்கனி வருகிறது. பவுல் நமக்கு சாத்தியக்கூறுகளைச் சுருக்கமாய்க் கொடுத்தார் - ''உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க." இங்கு வேத வாக்கியங்கள் அவைகளின் வல்லமையைக் கொண்டு அடையாளப்படுத்தப் படுகின்றன: அவைகள் ''வல்லமையுள்ளவைகளாய்'' இருக்கின்றன. எபி. 4:12, 13 பின்வருமாறு கூறுகின்றது:

> தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத் தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

அவைகள் விளைவிக்கக் கூடிய உற்பத்தியைக் கவனியுங்கள்: அவைகள் ''உங்களுக்கு ஞானத்தை[30] தருகின்றன.'' இந்த ஞானமானது முடிவு விளைவை எடுத்துரைக்கின்றது. பரிசுத்த எழுத்துக்கள் மனிதர்களை "இரட்சிப்புக்கு"[31] வழிநடத்துகின்றன. வேத வசனங்கள் நம்மை ஆவிக்குரிய நலனில் மீண்டும் கட்டியெழுப்பி, நித்திய மரணத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கக் கூடும்! குறைவான மதிப்புடைய பயன்களை நாட மக்கள் எவ்வளவு அதிகமாய் விலை கொடுத்துள்ளனர்? தேவனுடைய பரிசுத்த எழுத்துக்களில் நாம் வளம் மிக்க செல்வத்தைக் கொண்டுள்ளோம் என்பதை மனிதர்கள் உணர்ந்தறிய வேண்டும். சான்டர்சென் என்ற பாடல் எழுதுபவர் கூறிய பின்வரும் வார்த்தைகளை ஆழமாய் உணர்ந்து பாருங்கள்:

மதிப்பு மிக்க தெய்வீக புத்தகம்[32]

ஏவுதலினால் தரப்பட்ட தெய்வீக புத்தகம் எவ்வளவு மதிப்புள்ளதாய்
உள்ளது!
என் ஆன்மாவை பரலோகத்திற்கு வழிநடத்த அதன் கொள்கைகள்
விளக்கமாய் ஒளிர்கிறது!
நித்திய நாளின் தெளிவான வெளிச்சத்தை நான் பற்றும் வரையிலும்,
வாழ்வின் சோர்வூட்டும் இரவு யாவற்றிலும் இவ்விளக்கு என்னை
வழிநடத்தும்,
பரிசுத்த வேதாகமம், தெய்வீக புத்தகம்! மதிப்புமிக்க செல்வம் நீ
என்னுடையதே!
(விண்ணக) இல்லத்திற்கு என்னைப் பாதுகாப்பாய் நடத்தும் (நீ) என்
கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாய்
இருக்கின்றாய்.

வேதாகமத்தின்மூலம் நமக்குக் கிடைக்கின்ற சாத்தியக் கூறுகளைப்

பற்றிய விழிப்புணர்வானது தெய்வீக திட்டத்திற்கு உடன்படும்படியான ஒரு உண்மையான விருப்பத்தை நமக்குள் கட்டியெழுப்ப வேண்டும்: "விசுவாசம்." "விசுவாசத்தின் மூலமாக" பல ஆசீர்வாதங்கள் வந்துள்ளன (எபே. 2:8; கலா. 3:26, 27; கொலோ. 2:12; பிலி. 3:9; எபி. 6:12; 11:3, 11, 28, 33, 39; 1 பேது. 1:3-5 ஆகியவற்றைக் காணவும்).

அந்தத் திட்டம் கிறிஸ்துவின் மூலமாகச் செயல்படுகின்றது, மற்றும் இது நம்மை அவருக்கு "உள்ளாக" விட்டுச் செல்லுகின்றது. அவரே, "வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கின்றார்" (யோவா. 14:6; அப். 4:12; எபே. 1:3-14). அவரையல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது, ஆனால் அவர் மூலமாக நாம், தேவன் நாம் செய்யும்படி விரும்புகின்ற யாவற்றையும் செய்ய முடியும். இரட்சிப்பிற்காக மனிதரின் செயல்முறையானது விசுவாசத்தின் மூலமாகவும், கிறிஸ்துவுக்கும் அவருடைய கட்டளை களுக்கும் கீழ்ப்படிதலின் மூலமாகவுமே நடைபெறுகிறது (யோவா. 3:16; மாற். 16:15, 16; அப். 22:16; எபி. 5:8, 9), ஏனெனில் கிறிஸ்து தேவனின் அளிப்பாக உள்ளார் (1 யோவா. 2:1, 2; 4:14).

## வேத வசனங்களின் வல்லமை (வ. 16, 17)

வேத வாக்கியங்களுக்கு 3:16, 17ல் உள்ள மகிமைமிக்க மூன்று புகழுரைகள் நம்மைத் தெளிவுபடுத்தி, நம்மை நன்றி நிறைந்தவர்களாக்கி, நம்மை இலக்கிற்காகச் செயல்படுபவர்களாக்க வேண்டும்.

### வேத வாக்கியங்கள் தேவனால் அருளப்பட்டவை

வேத வாக்கியங்கள் தேவனால் அருளப்பட்டவை என்பதை நாம் நினைவுகூருதல் அவசியம். பவுல், "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால்[33] அருளப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (3:16; 2 பேது. 1:20, 21; எபே. 3:3-5ஐக் காணவும்). வேத வாக்கியங்கள் மனிதரின் சாதனை யாகவோ அல்லது திருச்சபைச் சட்ட முடிவாகவோ இருப்பதில்லை. அவைகள் ஒரு சபையின் பதிவேடோ அல்லது ஒரு மாநாட்டு ஆணையோ அல்ல. வேத வாக்கியங்கள் தேவனுடையவைகளாய் உள்ளன. அவைகள் தேவனால் தரப்பட்டன, மற்றும் வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் (மத். 24:35; யோவா. 12:48; ஏசா. 55:8-11) வேத வாக்கியங்களின் சத்தியமானது நிலைத்து நிற்கும் (2:19ஐக் காணவும்). மனிதரின் மதக் குழுக்களோ (synods) அல்லது திருச்சபைச் சட்ட மாநாடுகளோ வேத வசனங்களை "தேவனால்" ஆக்கப்பட்டதாகச் செய்ய இயலாது. தேவனே அதைச் செய்தார்!

### வேத வாக்கியங்கள் ஒரு கொடையாக உள்ளன

தேவனுடைய வசனமானது "பிரயோஜனமுள்ளதாக"[34] இருப்பதால் அது விலையேறப் பெற்ற ஒரு வெகுமதியாக/கொடையாக உள்ளது. வேதாகமம் தனக்குதானே ஏற்படுத்திக் கொள்ளுகின்ற இந்த உரிமை கோருதல் மாபெரும் அடக்கக் கூற்றுகளில் ஒன்றாக இருக்க வேண்டும்.

*மனிதரின் தேவை (ரோமர் 3:23) மற்றும் தேவனுடைய மீட்பின் திட்டம் (எபே. 2:1-8) ஆகியவற்றை ஆழ்ந்து சிந்திக்கையில் சுவிசேஷ செய்தியின் மாபெரும் தன்மையை விளக்கப்படுத்த வார்த்தைகள் உண்மையில் போதுமானவைகளாய் இருப்பதில்லை. வேத வசனங்கள் பயனுள்ளவை களாயும் நிறைவானவைகளாயும் உள்ளன. இவைகள் நமக்கு நான்கு வழிகளில் தனிச்சிறந்தவைகளாய் உள்ளன:*

*1. தேவனுடைய வசனமானது "உபதேசத்திற்கு"ப் பிரயோஜனமுள்ள தாக இருப்பதால் அது இயக்கத்தை/இயங்க வேண்டிய திசையை நமக்கு அளிக்கின்றது. நமது மீட்பானது ''மனிதருக்கும்,'' ''திட்டத்திற்கும்,'' நபருக்கும் அவரது ஆணைகளுக்கும் இயக்கப்படுவதாக/சரியான விளைவை அடையும்படி முடுக்கி விடப்படுவதாக உள்ளது (அப். 4:12; யோவா. 8:31, 32; 2 யோவா. 9; ரோமர் 1:16, 17).*

*மனிதன் தனது சொந்த அடிவைப்புக்களை இயக்குதல் எவ்வாறு என்று அறியாதவனாக இருக்கின்றான் (எரேமியா 10:23). மனிதனுக்குச் செம்மையாகத் தோன்றுகிற வழி உள்ளது, ஆனால் அதன் முடிவோ மரண வழியாய் உள்ளது (நீதி. 14:12). நம்மை வழிநடத்துவதற்கு வேத வசனங்களின் உபதேசம் தேவை என்பது தெளிவு!*

*2. வேத வாக்கியங்கள் கண்டறிதல் அல்லது ''கடிந்து கொள்ளு தலுக்கும்''[35] பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கின்றன. தவறுகள் சரியாக்கப்பட வேண்டும், இல்லையென்றால் சிலுவையானது கேலிக்குரிய தாகி விடும் (யாக். 1:21-25; 1 யோவா. 2:1, 2). நமது தவறுகளை வெளிப் படுத்தவும் நம்மை பொல்லாத வழியிலிருந்து திருப்புவதற்கும் குற்றம் உணர்த்தவும் வேதாகமம் ஒரு கருவியாக உள்ளது (எபி. 4:12, 13; ரோமர் 7:7; தீத்து 1:9, 10).*

*யாரோ ஒருவர், தேவனுடைய வசனத்தைப் பற்றிப் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்: "இதை நான் வாசிக்கும் ஒவ்வொரு நிமிடத்திலும், இது ஒரு பாவத்தைக் கொல்கிறது அல்லது அதற்கு (பாவத்திற்கு) எதிராகப் போராட ஒரு ஒழுக்க நெறியை அனுமதிக்கின்றது." வேத வாக்கியங்கள் நமது பாவங்கள் மற்றும் நமது பலவீனங்களுக்குள்ளாக ஒரு உட் கண்ணோக்கை நமக்கு அளிக்கின்றன, அதிகம் மேன்மையான நோக்கங் களுக்காக நமது வாழ்வை ஒப்புக் கொடுக்கும்படி நம்மை அழைக்கின்றன.*

*3. வேத வாக்கியங்கள் ஒழுக்கத்திற்கும் அல்லது "சீர் திருத்துதலுக்கும்"[36] நல்லவைகளாய் உள்ளன. வேத வாக்கியங்கள் பாவத்தைப் பற்றி நமக்கு உணர்த்துகின்ற பொழுது, அவைகள் தேவபக்தியை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்களினால் மேம்படுத்திக் கொள்ளுதலை நமக்குச் சுட்டிக் காண்பிக்கின்றன (1 பேது. 1:22-2:2ஐக் காணவும்). கர்த்தர் (நம்மை) ஒழுங்கு படுத்தத் துணிகின்றார், அவரது வசனமானது ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்த்து வைக்கும் (2 யோவா. 9) தூக்கு நூலாக (ஆமோஸ் 7:7, 8) அல்லது நியமமாக உள்ளது.*

*4. வேத வாக்கியங்கள் முன்னேற்றத்திற்குப் பிரயோஜனமுள்ளவை களாய் இருக்கின்றன, ஏனென்றால் அவை "நீதியைப் படிப்பித்தலை"[37] அளிக்கின்றன. இந்தச் சொற்றொடரில் ''கூறுதல்'' என்பதை விட அதிக*

மானது உள்ளடங்கியிருக்கிறது என்பதைக் காண்பது சுலபமானதாக உள்ளது. இது *பயிற்சியை* உள்ளடக்குகிறது, அந்தப் பயிற்சியானது ஒருவர் பக்குவத்தில் உருவாக்கப்பட்டு நிலைநிற்கச் செய்யும் செயல்முறை முழுவதையும் உள்ளடக்குகின்றது. இவ்விஷயத்தில் "*நீதி*"[38] என்பதே அந்தப் பக்குவமாக உள்ளது.

பாவத்திலிருந்து பரிசுத்தத்திற்கு, உறுதியற்ற தன்மையிலிருந்து விசுவாசத்திற்கு, பொல்லாங்கான வாழ்க்கை நடத்துவதிலிருந்து தெய்வீக இயல்பை மேற்கொள்வதற்கு நாம் கடந்து வருதலில் வேத வசனங்கள் நமக்கு வழிகாட்டுகின்றன! *சத்தியம் என்பது எவ்விதமான ஒரு தூக்கிச் செல்பவராகவும், மாற்றுகிறவராகவும் உள்ளது!*

### வேத வாக்கியங்களின் இலக்கு

"*தேவனுடைய மனுஷன் தேறினவனாக*"[39] (3:16) இருக்க வேண்டும் என்பதே வேத வாக்கியங்களின் இலக்காக உள்ளது. இது "*எந்த நற்கிரியையும் செய்தல்*" என்பதுடன் இணைக்கப்படும் போது என்ன ஒரு அறைகூவலாக உள்ளது! (மத். 5:16; எபே. 2:10; தீத்து 2:11-14 ஆகியவற்றைக் காணவும்).

இந்த அறைகூவலுக்குச் சமமானவராய் இருப்பது யார்? *நம்மில் எவருமில்லை!* தேவனாலே நமக்குப் பலன் உண்டாயிருக்கிறது (எபே. 6:10-13) என்பதற்காகவும், அவர் நம்முடனும் நமக்குள்ளும் கிரியை செய்கின்றார் என்பதற்காகவும் அவருக்கு நன்றி (1 கொரி. 3:9; 2 கொரி. 3:5; 9:8-11; பிலி. 2:12-16; விசேஷமாக வச. 13; 2 தீமோ. 2:1). அவசியமான உட்பொருள்கள் நாமல்ல, ஆனால் நாம் ''தகுதியுடையவராக்கப்'' பட்டிருக்கிறோம்![40]

நாம் வளரும்படியாகவும், தேவனுடைய நற்செய்தியுடன் செல்லும்படியாகவும், ஒவ்வொரு நற்செயலிலும் துடிப்புடன் இருக்கும்படியாகவும் தேவன் தமது கிருபை யாவற்றையும் பயன்படுத்துகின்றார்.

இது பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய முதல் நிருபத்தில் கொடுத்த அதே முடிவாக இருப்பதில்லையா (1 தீமோ. 4:16)?

## தொகுப்புரையில்

இந்த அதிகாரத்திற்குப் பொருத்தமான தொகுப்புரையொன்று ரோனால்டு வார்டு அவர்களால் கொடுக்கப்பட்டது:

> *தேவனுடைய மனிதன் என்பவர் யாராயிருப்பினும், எந்த ஒரு சூழ்நிலையிலும் முழுமையானவராயிருக்கும்படி வேத வாக்கியம் ஏவப்பட்டதாகவும், பிரயோஜனமுள்ளதாகவும் இருக்கிறது. இதன் கொள்கையானது தீமோத்தேயுவுக்கும் தேவனுடைய மனிதர் ஒவ்வொருவருக்கும் நடைமுறைப்படுத்தப்படுவதாய் உள்ளது. முழு நிறைவு என்பதிலிருந்து நாம் அவரது தனிப்பட்ட பூரணத்துவத்தையல்ல ஆனால் அவர் ஊழியத்திற்கான குறிப்பிட்ட எந்தத் தகுதியிலும் குறைவுபடத் தேவையில்லை என்பதையே உய்த்துணருகின்றோம். அவர் தம்முன் வைக்கப்பட்ட கடமைக்குத் தன்னைத் தகவமைத்துக்*

கொள்ளலாம் என்பதே நோக்கமாய் உள்ளது. அவர் தம்மை வேத வசனங்களில் முற்றிலும் ஆழ்த்திக் கொண்டுள்ளவராய் இருந்தால், அதற்காக அவர் மதம் என்ற வட்டத் துளையில் நுழைக்கப்பட்ட சதுர வடிவான தத்துவ ஆப்புக் கட்டை போல் இருப்பதில்லை. இவ்விதமாக அவர் தேவையான யாவும் அளிக்கப்படுவார்; அவரிடம் "முடிவுப்பணி" இருக்கும். அவர் தயாராக இருப்பதுடன் (2:21ன் மீது காணவும்) வல்லவராகவும் இருப்பார்.[41]

இது தேவனுடைய மனிதரை முழுமையாக்கி விடுகிறது என்றால், அதிகாரம் 4, சிலுவையின் ஒவ்வொரு போர்ச் சேவகனுக்கும் பலம் வாய்ந்த அறைகூவலை ஒப்புவிக்கிறது!

---

## "கடைசி நாட்களில்" தவிர்க்க வேண்டிய மக்களைப் பற்றி பவுலின் சித்தரிப்பு *(2 தீமோ. 3:2-5)*

***"தற்பிரியர்"*** (Gk.: *philautos*) - சுயநலம்; ஒருவர் தம் சுய விருப்பங்களில் மிக அதிகமான நோக்கங் கொண்டிருத்தல் (T, 653). தவறுகளின் பட்டியலில் இது முதலாவதாக இருப்பதில் வியப்பெதுவும் இல்லை. ஒருவர் தம் சுயத்தைப் பற்றி மிக உயர்வாக மதிப்பிட்டுக் கொண்டிருத்தலும், சுய விருப்புகளும் மற்றும் சுயத்தை மையமாகக் கொண்ட ஆசைகளுமே பிசாசுத்தனமான பல செய்கைகள் புறப்படும் இடமாக உள்ளன.

***"பணப்பிரியர்"*** (Gk.: *philarguros*) - பேராசைக்காரர் (R, 762). "தேவ பக்தியே மிகுந்த ஆதாயத்தின் வழி வகையாய் இருக்கையில்" (1 தீமோ. 6:6), பணத்தைத் தங்கள் முதல் முன்னுரிமையாகக் கொண்டுள்ளவர்கள் தங்கள் சுதந்தரத்தை, காரண அறிவை, தூய்மையை, விசுவாசத்தை மற்றும் மனநிறைவை - மற்றும் நிறைவாக தங்கள் ஆத்துமாக்களை - இழக்கின்றனர்.

***"வீம்புக்காரர்"*** (Gk.: *alazon*) - வெறுமையான நடிப்பாளர் (T, 25). சுயநலமான ஒரு நபர், தாமாகவே தற்பெருமைக்காரராக உள்ளார்.

***"அகந்தையுள்ளவர்"*** (Gk.: *huperephanos*) - மூர்க்கமானவர், பிறரை இகழ்பவர்/ சிறுமைப்படுத்துபவர் அல்லது அவர்களை விரோதமாகக்கூட நடத்துபவர் (T, 641). இது அவர் பிறருக்கு எதிராகச் செயல்படுதல் மற்றும் துன்புறுத்துதல் ஆகிய வற்றிற்கும் அப்பால் சென்றுள்ள வீம்புத் தன்மையாக உள்ளது.

***"தூஷிக்கிறவர்கள்"*** (Gk.: *blasphemos*) - தூஷணிப்பவர்கள் (T, 103). மூர்க்கமான நபருக்கு எதிராக பிறர் எதிர்ச் செயல் (வழக்கமாய் அவர்கள் செய்கிற விதமாகவே) செய்யும் பொழுது, தூஷிக்கிறவர் போல் நடிப்பது என்பது "நியாயப்படுத்தும்" பதில்செயல் ஆகின்றது.

***"தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்கள்"*** ("கீழ்ப்படியாதவர்" = Gk.: *apeithes*) - இணங்க வைக்கப்பட முடியாதவர்கள், விட்டுக் கொடுக்காதவர்கள் (T, 55). பெற்றோர்கள் முயற்சி செய்யலாம், ஆனால் கீழ்ப்படியாமையுள்ள பிள்ளையானது விட்டுக் கொடுக்காது. மக்களில் சிலர் வாழ்வின் முற்பகுதியிலேயே பிசாசுடன் செயல்படத் தொடங்கி விடுகின்றனர்.

***"நன்றியறியாதவர்கள்"*** (Gk.: *acharistos*) - நன்றியற்றவர்கள் (T, 90). நம்மை ஆசீர்வதிப்பவர்களையும் நம் மீது அக்கறையுள்ளவர்களையும் பார்க்காமல் இருப்பதும் எப்பொழுதுமே தேவனுடனும் மனிதருடனும் மோசமான

உறவுமுறைகளுக்கான ஆதார மூலமாக இருந்துள்ளது.

***"பரிசுத்தமில்லாதவர்கள்"*** (Gk.: *anosios*) - பக்தியற்றவர்கள், பொல்லாதவர்கள் (T, 49). இப்படிப்பட்ட நபருக்கு ஏதொன்றும் அல்லது எவரொருவரும் பரிசுத்தமாய் இருப்பதில்லை! இவர் தேவனை அவசங்கை செய்து இழிவுபடுத்துகிறார்.

***"சுபாவ அன்பில்லாதவர்கள்"*** (Gk.: *astorgos*) - குடும்பப் பாசமோ அல்லது குழந்தையின் மீதான அன்போ இல்லாதவர்கள் (AS. 65). அன்பு வளர்க்கப்பட்டிருக்க வேண்டிய இடத்தில் அது கண்டு கொள்ளப்படாமலும் புறக்கணிக்கப்பட்டும் உள்ள நிலை.

***"இணங்காதவர்கள்"*** (Gk.: *aspondos*) - ஒரு உடன்படிக்கைக்குள் நுழையும்படி இணங்க வைக்கப்பட முடியாதவர்கள் (T, 81). இங்கு சமாதானம் அடையாத அல்லது திருப்தியடையாத மனிதர் உள்ளார். இவருடன் ஒரு உடன்பாடோ, அல்லது செயல்திட்டமோ நிலைநாட்டப்படுவதற்கு வழி எதுவும் இருப்பதில்லை. அவர் - மனுஷீக மற்றும் தெய்வீக - உறவுகள் யாவற்றிலும் சுயமையம் கொண்டவராக மற்றும் பிடிவாதம் மிக்கவராக உள்ளார், அவை (உறவுகள்) யாவும் அவரால் மடியும்.

***"அவதூறு செய்கிறவர்கள்"*** (Gk.: *diabolos*) - அவதூறு செய்தலுக்கு உட்படு கிறவர்கள் ..... சிந்தையிலும் சித்தத்திலும் பிசாசைப் பிரதிபலிக்கிறவர்கள், சிந்தனை மற்றும் செயலில் பிசாசைச் சார்ந்துள்ளவர்கள், மற்றும் அவனால் தூண்டப்பட்டு, ஆளப்படுபவர்கள் (T, 135). இந்த அவதூறு செய்பவர்கள் விரைவிலோ அல்லது தாமதமாகவோ தங்களிடத்தில் பிரச்சனைகளை நம்பிக்கையுடன் கூறுபவர்களைக் காட்டிக் கொடுப்பார்கள்.

***"இச்சையடக்கமில்லாதவர்கள்"*** (Gk.: *akrates*) - வல்லமையற்றவர்கள், .... ஒழுக்கரீதியான கருத்தில், தன்னடக்கம் குறைந்தவர்கள் (AS, 18). இந்தத் தனிநபர்கள் தங்களிடம் உள்ள சுய ஒழுக்கக் குறைவினால் தங்கள் சூழ்நிலைகள் (மற்றும் ஆத்துமாக்களை) கட்டுப்பாட்டிற்குப் புறம்பே இருக்கக் காண்பார்கள், ஒரு பாவம் இன்னொரு பாவத்திற்குச் சுலபமாய் வழிநடத்துகிறது.

***"கொடுமையுள்ளவர்கள்"*** (Gk.: *anemeros*) - அடக்கப்படாதவர்கள், காட்டுத் தனமானவர்கள் அல்லது கொடூரமானவர்கள் (T, 45). இது முன்கூறப்பட்ட பிசாசுக்கடுத்த செயல்கள் யாவற்றின் உச்சக்கட்டமாக உள்ளது. அடக்கப்படாத இந்த முரட்டுத்தனமானவர்களுடன் பழக வேண்டிய நிலையில் உள்ள மக்கள் பரிதபிக்கப்படத் தக்கவர்கள்!

***"நல்லோரைப் பகைக்கிறவர்கள்"*** (Gk.: *aphilagathos*) - நன்மை மற்றும் நல்ல மனிதர்களை எதிர்ப்பவர்கள்; 2 தீமோ. 3:3ல் மட்டுமே இவ்வார்த்தை காணப்படுகிறது (T, 89). கிறிஸ்துவின் நற்பண்பு மற்றும் தேவபக்தி யாவும் கொடுமையான மனிதர்களால் அவர் சிலுவையில் அறையப்பட வழிநடத்திற்று.

***"துரோகிகள்"*** (Gk.: *prodotes*) - காட்டிக் கொடுப்பவர் (T, 538). விரைவிலோ அல்லது தாமதமாகவோ, இப்படிப்பட்ட மனிதர்கள் தங்களுக்குப் பிரியமானவர் களை விற்றுப் போடுவார்கள் அல்லது கைவிடுவார்கள்.

***"துணிகரமுள்ளவர்கள்"*** (Gk.: *propetes*) - முன்னோக்கி விழுபவர்கள், தலைநீட்டுபவர்கள் .... அவசரக்காரர்கள் (T, 541). விசுவாசமற்ற இவர்கள் அழிக்கக் கூடிய, பேரழிவுக்குரிய ஓட்டத்தைப் பின்தொடருகையில் பகுத்தறிவுக்குரிய பதில்செயல்கள் கைவிடப்படலாம்.

***"இறுமாப்புள்ளவர்கள்"*** (Gk.: *tuphoo*) - பெருமையினால் பார்வை மறைக்கப் பட்டவர்கள், மதியீனத்தை அல்லது அறிவின்மையைத் தரவழைப்பவர்கள் (T, 633). இவ்வகையான பார்வையற்ற தன்மையானது புண்படுத்துதலையும் துன்பத்தையும் உறுதிப்படுத்துகிறது.

***"சுகபோகப் பிரியர்"*** (Gk.: *philedonos*) - *சுகபோகத்திற்கு (தங்களை ஒப்புக்) கொடுத்தவர்கள்* (AG, 867). *இம்மக்கள் தேவன் மீது முதன்மை வைப்பதற்கு மாறாக சுகபோகங்களில் தங்கள் முதன்மையைத் தவறாக வைக்கின்றனர்.*

***"தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலித்தவர்கள்"*** (*"வேஷம்"* = Gk.: *morphosis*) -*தேவபக்தியாய் இருப்பதாக வெளி வேஷம் அல்லது வடிவம் மட்டும்* (T, 419). *விசுவாசமற்ற வேஷம் மோசடியாக உள்ளது. தேவபக்தியின் வேஷத்தைப் பற்றிக் கொண்டு உண்மையான தேவபக்தியின் பலனை மறுதலிப்பவர்கள் அல்லது மறுத்துரைப்பவர்கள்.*


AG Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957).

AS G. Abbott - Smith, *A Manual Greek Lexicon of the New Testament* (Edinburgh, Scotland: T. & T. Clark, 1948).

R Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* (New York: Harper & Brothers, 1863).

T C.G. Wilke and Wilibald Grimm, *A Greek - English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977).


---

*குறிப்புகள்:*

[1]*கொடிய* (Gk.: *chalepos*) - *"செய்வதற்குக் கடினமாயிருத்தல், மேற்கொள்ளக் கடினமாயிருத்தல் ... சுமக்கக் கடினமான, தொந்தரவுமிக்க, அபாயமான ... 2 தீமோ. 3:1, இரக்கமற்ற, கொடூரமான, காட்டுத்தனமான ... மத். 8:28"* (C.G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 664). [2]*அறிதல்* (Gk.: *ginoske*) - *''புரிந்து கொள்ளுதல், உய்த்துணர்தல் ... நிச்சய தன்மையை அறிதல் ... புறம்பான கருத்தாழங்களை பிரித்துணர்ந்து புரிந்து கொள்ளுதலைக் குறிக்கிறது, தனிப்பட்ட அனுபவத்தில் வேர் கொண்ட அறிவு"* (Thayer, 117-18). [3]Thayer, 69. [4]Kenneth S. Wuest, *Wuest's Word Studies,* vol. 2, *Pastoral Epistles* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1952), 145. [5]*நுழைதல்* (Gk.: *enduno*) - "[*நேரடிப் பொருளில்*] *வீடுகளில் புழுப் போல நுழைதல், 2 தீமோ. 3:6"* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 263)*; "உள்ளாக மூடுதல், ஒளிந்து கொள்ளுதல் ... மேற்கொள்ளுதல்/அணிதல் ... தவழ்ந்து ஏறிச் செல்லுதல், ஒருவரிடம் சிறிது சிறிதாக உட்புகுதல்; நுழைதல்"* (Thayer, 214). [6]*சிறைப்பிடித்தல்/வசப்படுத்துதல்* (Gk.: *aichmalotizo*) - *"சிறைப்பட்டவர்களாய் வழிநடத்துதல் ... கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல், ... ஒருவரின் சிந்தையைச் சிறைப்படுத்துதல் ... 2 தீமோ. 3:7"* (Thayer, 18). [7]*(பாவங்களினால்) நிறைந்துள்ள* (Gk.: *sesoreumena*) - *"குவித்தல் ... 2 தீமோ. 3:6, சுமத்துதல், பாரப்படுதல்"* (Robinson, 705)*; "குவித்தல் ... (ஓரிடத்தை) நிறைத்தல் ... தங்கள் பாவங்களில் மூழ்கடிக்கப்பட்ட அறிவற்ற பெண்கள்''* (Arndt and Gingrich, 808). [8]*பலவீனமான பெண்* (Gk.: *gunaikarion*) - *"அவமதிக்கத்தக்க, பலவீனமும் மதியீனமுமான பெண், 2 தீமோ. 3:7"* (Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper &

Brothers, 1863], 154); "... சிறு பெண், ஆனால் [சிறுமையான உய்த்துணர்தல்கள்], சோம்பலான, மதியீனமான பெண்" (Arndt and Gingrich, 167). [9]இச்சைகள் (Gk.: *epithumai*) - "ஊக்கமான விருப்பம், ஏங்குதல் ... முறையற்ற அளவுக்கு மீறிய விருப்பம் ... பசி, இச்சை ... கொலோ. 3:5 ... மாம்ச இச்சைகளை நிறைவேற்றுதல், 1 தீமோ. 6:9; 2 தீமோ. 3:6; 4:3; தீத்து 3:3; யாக். 1:14, 15 ... உணவு சார்ந்த பொருள்களின் மீது வைக்கப்பட்ட விருப்பங்கள், சந்தோஷங்கள், பலன்கள், மதிப்புகள் ... வஞ்சனை நிறைந்த இச்சைகள், எபே. 4:22 ... இளமைக்குரிய இச்சைகள் 2 தீமோ. 2:22 ... அசுத்தமான விருப்பம் பற்றிப் பேசுதல், காம இச்சை, ரோமர் 1:24; 1 தெச. 4:5" (Robinson, 279). [10]துர்ப்புத்தி (Gk.: *kataphtheiro*) - "முற்றிலுமாய் வீணாக்குதல், மோசம் போக்குதல், ... வீணாக்குதல் ... துர்ப்புத்தி யளித்தல் ... 2 தீமோ. 3:8 ... அழித்தல் ... 2 பேது. 2:12" (Robinson, 390).

[11]நில்லாதவர்கள் (Gk.: *adokimos*) - "அங்கீகரிக்கப்படாமை, புறக்கணிக்கப் படுதல் ... ஆக்கினைக்குப் பாத்திரர், கொள்கையற்றவர்கள், ரோமர் 1:28; 2 தீமோ. 3:8 ... அனுமதிக்கப்படாதவர்கள், ... தகுதியில்லாதவர்கள் ... வீண்" (Robinson, 14); "... பரீட்சைக்கு நில்லாதவர்கள் ... தான் இருக்க வேண்டியபடி தன்னை நிரூபிக்காத தன்மை ... 1 கொரி. 9:27; 2 கொரி. 13:5-7 ... சிலவற்றிற்குத் தகுதியின்மை ... தீத்து 1:16" (Thayer, 12). [12]"பின்பற்றுதல்" என்பதற்கான கிரேக்கச் சொற்றொடரான *parakoloutheo* என்பது "பக்கம் பக்கமாய்த் துணையிருத்தல், நெருங்கிப் பின்பற்றுதல் ... பரிசோதித்தல்" என்றும் "ஒன்றுடன் ஒத்த நிலையில் இருத்தல் ..." என்றும் அர்த்தப்படுகின்றது (Robinson, 550). [13]நடக்கை (Gk.: *alole*) - "வழிநடத்துதல் ... நடத்திச் செல்லுதல், பயிற்சி, கல்வி, ஒழுங்கு, ... வழிநடத்திய வாழ்வு, வாழ்வின் வழி அல்லது ஓட்டம் ... 2 தீமோ. 3:10" (Thayer, 10). [14]நோக்கம் (Gk.: *prothesis*) - "முன் அமைத்தல், வெளியிடுதல், முன்னிறுத்தல் ... திட்டம், நோக்கம், தீர்மானம், சித்தம் ... 2 தீமோ. 3:10 ... சிந்திக்கும் வழி வகை ... இருதயத்தின் நிர்ணயம் ... அப். 11:23 ... தெய்வீக நோக்கம் சார்ந்தது ... அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள், ரோமர் 8:28 ... நித்திய/அநாதி தீர்மானத்தின்படி, எபே. 3:11" (Arndt and Gingrich, 713). [15]பொறுமை (Gk.: *makrothumia*) - "சகிப்புத்தன்மை, நிலைப்புத் தன்மை, உறுதியாக நிற்குதல், நீடிய பொறுமை; ... துன்பங்கள் மற்றும் தீமைகளைச் சகிப்பதில் காண்பிக்கப்படுவது ... கொலோ. 1:11; 2 தீமோ. 3:10; எபி. 6:12; யாக். 5:10 ..." (Thayer, 387). [16]அன்பு (Gk.: *agape*) - "பிரியம், நற்சிந்தை, ... உபகாரம் ... அன்பிலிருந்து மேற்கொள்ளப்படுகிற துன்பமிக்க ஊழியம், கடின உழைப்பு, 1 தெச. 1:3 ... சத்தியத்தை அரவணைக்கின்ற அன்பு, 2 தெச. 2:10" (Thayer, 4). [17]நீடிய சாந்தம் (Gk.: *hupomone*) - "உறுதிப்பாடு, நிலைப்புத்தன்மை, சகிப்புத் தன்மை கொண்டிருத்தல் ... புதிய ஏற்பாட்டில் பண்பில், ஒரு மனிதரின் விசுவாசம் மற்றும் பக்திக்கான தம் வெளிப்படையான நோக்கம் மற்றும் பற்றுறுதியில், மாபெரும் சோதனைகள் மற்றும் துன்பங்களின் போதும் அசையாது நிற்குதல் பற்றியதாகும். லூக். 8:15; 21:19; ரோமர் 5:3 ... 2 தெச. 1:4; 1 தீமோ. 6:11; 2 தீமோ. 3:10; தீத்து 2:2" (Thayer, 644). [18]பாடுகள் (Gk.: *pathema*) - "துரதிர்ஷ்டம், துன்பம், பொல்லாங்கான பாடுகள் ... ரோமர் 8:18; 2 கொரி. 1:6 ...; கொலோ. 1:24; 2 தீமோ. 3:11; எபி. 2:10; 10:32 ..." (Thayer, 472). [19]சகித்தல் (Gk.: *hupophero*) - "கீழாகச்சுமத்தல் ... கீழாகச் சுமந்திருத்தல், ஆதரித்தல், நிலை நிற்கச் செய்தல் ... 1 கொரி. 10:13 ... 2 தீமோ. 3:11 ... 1 பேது. 2:19" (Robinson, 752). [20]நீங்கலாக்கி விடுதல் (Gk.: *errusato*) - பவுல் விடுதலையாவதைக் காண்பதைக் கர்த்தர் தம்முடைய கடமையாக மேற்கொண்டார். உண்மையிலேயே கர்த்தர் தமக்குச் சொந்தமானவர்களைக் கவனிக்கின்றார் (1 கொரி. 10:13; 2 தீமோ. 4:16-18). இதைக் கர்த்தர் செய்வது நம்மை விடுவிப்பதற்காக, "ஒருவரை அபாயத்திலிருந்து பின்னிழுத்து அல்லது கைப்பற்றி ...

*மீட்பதற்காக ... 2 பேது. 2:7 ... ரோமர் 11:26 ... ; 1 தெச. 1:10 ... 2 தீமோ. 4:18 ... கொலோ. 1:13; 2 தீமோ. 3:11"* (Robinson, 650).

[21]*ஜீவித்தல்* (Gk.: *zao*) - *"உயிருடன் இருத்தல் ... வாழுதல் மற்றும் வாழப் போராடுதல் என்ற கருத்தில், 2 கொரி. 6:9; 1 தெச. 3:8 ... மீட்கப்படுதல் ... செயல் படுதல், ஆசீர்வதிக்கப்படுதல், தேவனுடைய இராஜ்யத்தில் முடிவற்றிருத்தல் ... ஒப்புக் கொடுத்தல், பரிசுத்தப்படுத்துதல், ஒருவருக்கு வாழ்வு; யாரேனும் ஒருவருக்கோ அல்லது அவர் நிமித்தமாகவோ பயன் தரும் விளைவை உண்டாக்கும் வகையில் வாழ்தல் ... , 20:38 ;ரோமர் 6:10 ... ; கலா. 2:19 ... 2 கொரி. 5:15 ... 1 பேது. 2:24"* (Thayer, 269-70). [22]*பொல்லாத* (Gk.: *poneros*) - *"உழைப்புகளினால் ... துன்பங்களினால் நிறைந்திருத்தல் ... உழைப்புகளினால் அழுத்தப்பட்டு தொல்லைப் பட்டிருத்தல் ... தொந்தரவுகள், சேதங்கள். எபே. 5:16; 6:13 ... சூழ்நிலைகளின் மோசமான இயல்பு ... உடல்ரீதியான கருத்தில் ... வியாதிப்பட்ட அல்லது பார்வை இல்லாமற்போன நிலை, மத். 6:23; லூக். 9:34 ... ஒழுக்க ரீதியான கருத்தில், பொல்லாத, துன்மார்க்கமான, மோசமான ... மத். 7:11; 12:34 ... 2 தீமோ. 3:13 ... பிசாசுக்குரிய ... மத். 5:37; 6:13; 12:19, 38 ... 1 யோவா. 2:13 ... ; 3:12"* (Thayer, 530-31). [23]*எத்தன்* (Gk.: *goes*) - *"ஒரு சூனியக்காரன், தந்திரவித்தைக்காரன் ... அபகரிப்பவன், ஏமாற்றுபவன் ... 2 தீமோ. 3:13"* (Arndt and Gingrich, 163-64); *"... புலம்புபவர், ஓலமிடுபவர் ... மந்திரம் கூறுபவர் ... வஞ்சிப்பவர், எத்தர்"* (Thayer, 120). [24]*மோசத்திலிருந்து மிக மோசத்திற்குச் செல்லுதல்* (Gk.: *prokopto*) - *"முன்னோக்கி அடித்து விரட்டுதல், ... வளர்ச்சி ஏற்படுத்துதல் ... முன்னேறுதல், அதிகமாகுதல் ... தூரம் செல்லுதல், 2 தீமோ. 2:16; 3:9 ... அதிகம் செலவழித்தல், ரோமர் 13:12"* (Robinson, 621). *"... தூரம் செல்லுதல் ... மோசத்தில் இருந்து மிகவும் மோசத்திற்குச் செல்லுதல், 2 தீமோ. 3:13"* (Arndt and Gingrich, 714-15). [25]மோசம் போக்குதல் (Gk.: *plano*) - *"விலக்கி வழிநடத்துதல், அலைதல் ... சரியான வழியிலிருந்து ஒருவர் (விலகி) அலையக் காரணமாகுதல் ... உபா. 6:1 ... தவறாக வழிநடத்தப்பட்டிருத்தல் ... சுற்றித் திரிதல் ... மயக்கப்படுதல்"* (Arndt and Gingrich, 671); *"தவறுக்குக் காரணமாகுதல் ... தவறான நியாயத்தீர்ப்பை வடிவமைத்தல் ... மத். 24:4, 5, 11, 24 ... மயக்குதல் ... யோவா. 7:12 ... வெளி. 20:8, 10"* (Robinson, 586). [26]*நிலைத்திருத்தல்* (Gk.: *mene*) - *நிகழ்காலமானது, தீமோத்தேயு (தான் கற்றுள்ள விஷயங்களை) தனது தற்போதைய ஓட்டத்தில் கைக்கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுத்துகின்றது, மற்றும் கட்டளை வினையானது, தீமோத்தேயு அந்த ஓட்டத்தைத் தொடர வேண்டும் அல்லது "நிலைத்து இருக்க" வேண்டும் என்று அர்த்தப்படுத்துகின்றது* (Gk.: *meno*) - *"... தங்கியிருத்தல், நிலைத்திருத்தல் ... ஒரு விஷயத்தில் அதாவது தனது பலத்தில் நிலைத்திருத்தல், அப். 5:4 ... 1 கொரி. 7:11 ... 2 தீமோ. 2:13 ... தொடருதல், சகித்தல்; 1 கொரி. 15:6 என்றென்றும் சகித்தல், நிறைவுடைமையுடன் இருத்தல் ... 1 கொரி. 13:13 ... எபி. 13:1 ... உறுதியாய் நிலை நிற்குதல், சகிப்புத் தன்மை ... யோவா. 8:31"* (Robinson, 452-53). [27]*நிச்சயித்துக் கொண்டவை* (Gk.: *epistothes*) - *செயப்பாட்டு வினையானது, தீமோத்தேயு தமக்கு வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட உதவியைக் கொண்டிருந்தார், அதைப் பெற்றார் என்று காண்பிக்கிறது! "நிச்சயித்துக் கொண்ட" என்ற வார்த்தையின் இயல்பில் அவர் அதை எவ்வாறு நன்முறையில் பெற்றார் என்பது அடையாளப்படுத்தப்படுகின்றது. pistoo என்ற மூல வார்த்தை யானது "உண்மையுள்ளவராக, நம்பிக்கைக்குப் பாத்திரராக்குதல் ... நடுமையம் ... ஒருவரைக் கட்டுப்படுத்துதல் ... நிச்சயப்படுத்தியிருத்தல், விசுவாசித்தல், 2 தீமோ. 3:14" என்று அர்த்தப்படுகிறது* (Robinson, 586); *"... உறுதியாக நிலைநாட்டுதல், 1 நாளா. 17:14 ... உறுதியாய் இணங்கச் செய்தல்"* (Thayer, 514). [28]*அறிதல்* (Gk.: *oida*) - *"யாரேனும் ஒருவரைப் பற்றி அறிதல் ... (நெருங்கிய வகையில்) பழக்கமாகுதல்,*

*(நெருங்கிய) உறவுமுறையில் நிற்றல் ... 2 கொரி. 5:16 ...* தேவனை அறிதல், அதாவது அவரது இருப்பு பற்றி கோட்பாட்டளவில் மட்டுமின்றி, அவருடன் நேர்மறையான உறவுபட்டிருத்தல் ... *2 தெச. 1:8; தீத்து 1:16 ...* எவ்வாறு என்று அறிதல் அல்லது புரிதல் ... எவ்வாறு விளக்குவதென்று நீங்கள் புரிந்து கொள்ளுதல் ... *பிலி. 4:12; 1 தெச. 4:4 ... எபே. 1:18 ...* விசேஷமாக மனிதர்களின் சிந்தனைகளை ஆழம் காணும் இயேசுவின் வல்லமை ... *மத். 12:25 ... மாற். 12:15*" (Arndt and Gingrich, 558-59); "*Eido* ... உணர்வுகளினால் உய்த்தறிதல் ... புரிந்து கொள்ளுதல் ... பரிசீலனை செய்தல் ... அனுபவித்தல் ... புரிந்து கொண்டிருத்தல் ... எவ்வாறு என்று அறிதல் ... அதாவது வல்லவராய் இருத்தல் ... அறிதல் மற்றும் அங்கீகரித்தல் ... பராமரித்தல், ஆர்வம் மேற்கொள்ளுதல் *1 தெச. 5:12 ... நீதி 27:23 ... கலா. 4:8*" (Robinson, 208-10). [29]*பரிசுத்த* (Gk.: *ieros*) - "தேவனுக்குப் பரிசுத்தப்படுத்தப்பட்டதாய் இருத்தல் ... தேவனுக்குக் கொடுக்கப்பட்டவை ... *2 தீமோ. 3:15 ...* வேத வசனங்கள் ... பரிசுத்தமானைகள் ... *1 கொரி. 9:13*" (Robinson, 346); "... பரிசுத்த வேத வாக்கியங்கள், தேவனால் ஏவப்பட்டவைகளானதால், தெய்வீக விஷயங்களை நடப்பிப்பவை எனவே பயபக்தியுடன் மதிக்கப்பட வேண்டும்" (Thayer, 299). [30]*ஞானம்* (Gk.: *sophizo*) - "ஞானமாக்குதல், போதிக்கச் செய்தல், புரிந்து கொள்ளுதலைக் கொண்டிருத்தல் ... வியூகமாக அல்லது தந்திரமாகச் செயல்படுத்துதல்" (Thayer, 582); "... திறமைமிக்க, வல்லுநராக்குதல் ... ஒளியூட்டுதல், தெய்வீக விஷயங்களில் இவ்வாறு செய்தல் ... *2 தீமோ. 3:15 ...* திறமைமிக்க வகையில், நுட்பத்துடன் செயல்படுதல்" (Robinson, 670).

[31]*இரட்சித்தல்* (Gk.: *sozo*) - "துன்பத்திலிருந்து காத்தல், பாதுகாத்தல், மீட்டல் ... பத்திரமாக்குதல் ... உடல்நலத்தை மீட்டல், நன்றாக்குதல், செழிப்பாய் வளரச் செய்தல், வளமூட்டுதல் ... நித்திய மரணத்திலிருந்து மீட்டல் அல்லது பாதுகாத்தல், *1 கொரி. 1:21; 2 தீமோ. 1:9; தீத்து 3:5 ... 1 தீமோ. 1:15; 2 தீமோ. 4:18 ... மத். 1:21*" (Arndt and Gingrich, 805-6). [32]L. O. Sanderson, "The Precious Book Divine." Copyright, 1963, Renewal. Leon B. Sanderson, Owner used by Permission. [33]*தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது* (Gk.: *theopneustos*) - "... தேவன் ஏவியவை, தேவனால் உள்சுவாசிக்கப்பட்டவை, *2 தீமோ. 3:16*" (Robinson, 333). [34]*பிரயோஜனமுள்ளது* (Gk.: *ophelimos*) - "... உதவியானவை ... பயன்மிக்கவை ... *1 தீமோ. 4:8 ... 2 தீமோ. 3:16 ... தீத்து 3:8*" (Robinson, 803). [35]*கடிந்து கொள்ளுதல்* (Gk.: *elegmos*) - "ஒரு பாவியைக் குற்றம் உணர்த்துதல் *(எண். 5:18 ...)*, மேலும் கடிந்து கொள்ளுதல் ... மற்றும் தண்டனை ... *2 தீமோ. 3:16*" (Arndt and Gingrich, 248). [36]*சீர்திருத்தல்* (Gk.: *epanorthosis*) - "மீண்டும் நேராக அமைத்தல் ... மீளக் கட்டியெழுப்புதல் ... இருதயம் மற்றும் வாழ்வு, சீர்திருத்தம், திருத்துதல் பற்றியது, *2 தீமோ. 3:16*" (Robinson, 267). [37]*படிப்பித்தல்* (Gk.: *paideia*) - "ஒரு பிள்ளையைப் பயிற்றுவித்தல் ... கல்வி, ஒழுங்கு முறை, அறிவுறுத்தல், போதனை, புத்திமதி, பலன்கள், தண்டனை ஆகியவற்றில் அடங்கியுள்ள வகையில் ... கர்த்தர் அங்கீகரித்து கேட்கின்ற வகையிலான பயிற்சி, *2 தீமோ. 3:16*" (Robinson, 539). [38]*நீதி* (Gk.: *dikaiosune*) - "நீதியும் நேர்மையுமாய் இருத்தல் அல்லது செய்தல் ... நீதி, சமத்துவம், பட்சபாதம் இல்லாமை ... பண்பில் ... தகுதியாக உள்ளது, பொருத்தமாக உள்ளது ... *எபே. 5:9; 1 தீமோ. 6:11; 2 தீமோ. 2:22 ...* இரக்கத்தில், உபகாரத்தில், அளவற்ற தயையில் வெளிப்படுத்தப்படுவது, *2 கொரி. 9:9, 10 ...* இருதயம் தேவனுடன் நேராக உள்ள, தேவனிடத்தில் பக்தியுடன் உள்ள இடம் ... *ரோமர் 6:16, 18 ...* தேவனி(டமிருந்து) வரும் அவரது நீதி, இது கிறிஸ்துவில் (அவர் மூலம்) கொண்டுள்ள விசுவாசமாக உள்ளது ... *பிலி. 3:9 ... 1 கொரி. 1:30*" (Robinson, 184). [39]*தேறினவர்* (Gk.: *artios*) - "தன் வகையில் பரிபூரணப்பட்டிருத்தல்; ஒன்றும் தேவையற்ற நிலையில் உள்ள மத போதகரைப்

*போன்ற நிலை''* (Robinson, 96); *''... திறன்மிக்க, திறமை வாய்ந்த = எல்லா வேண்டுகோள்களையும் சந்திக்கக் கூடிய''* (Arndt and Gingrich, 110).

[40]*தேவையானவற்றை அளித்தல்* (Gk.: *exertismenos*) - *"முழுமையாய் நிறைவு செய்தல், முடித்து வைத்தல் ... முற்றிலும் அளித்தல்''* (Robinson, 259). செயப்பாட்டு *வினையானது இது நாமே செய்கிற சில விஷயமல்ல ஆனால் தேவனும் அவரது வார்த்தைகளும் நாம் நமக்கப்பால் செல்லும்படி நமக்கு வல்லமை அளிப்பதற்காக அவரிடமும் அவரது வார்த்தையிடமும் நாம் நம்மை ஒப்புவித்தலை நிரூபிக்கிறது (2 கொரி. 8:1-7, விசேஷமாக வச. 3ஐக் காணவும்; மேலும் "மறுரூபமாக்கப்படுதல்" என்று செயப்பாட்டு வினை உள்ள ரோமர் 12:2ஐயும் காணவும்). தேவன் நமக்குள் "மாற்றத்தைக் குறுக்குவதில்லை."*

[41]Ronald A. Ward, *Commentary of 1 and 2 Timothy and Titus* (Waco, Tex.: Word Books, 1974), 201.